07.02.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.191/2025</u>

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மஞ்சுளா | | |
| க /பெ | குமார் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 44/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 07.02.2026 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மேற்படி விலாசத்தில் வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் புகார்தாரரர் சிவகங்கா மற்றும் ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். சிவகங்கா எனக்கு சொந்தமில்லை. 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அவர் வீடு எரிந்த விவரம் எனக்கு காலையில் தான் தெரியும். வீடு எறிந்த பிறகு தான் தெரியும். யார் கொளுத்தினார்கள் என்றும், சிவகங்கைக்கும் வேறு யாருக்கும் முன் விரோதம் இருந்ததா? என்றும் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>

அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-

கடந்த 01/06/2023ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் எங்கள் ஊரை சேர்ந்த வீரபத்திரன் என்பவர், எனது மூத்தாரின் மகளான சிவகங்கா என்பவரிடம், என் மகன்கள் மீது ஏன் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று குடித்துவிட்டு வந்து தகராறு செய்தார் என்றும், அப்போது எங்களிடம் வைத்துக் கொண்டால் உங்களது வீட்டை கொளுத்தி ஊரை விட்டு காலி செய்து விடுவோம் என்று கூறிவிட்டு சென்றார் என்றும், நானும், பரத் என்பவரும், அந்தத் தகராறை மறித்துவிட்டோம் என்றும், பின்பு மறுநாள் அதிகாலை 3.00 மணியளவில் சிவகங்காவின் வீடு எரிந்தது என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில், உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறுவிசாரணை

இல்லை